ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமோழி

# 13 – கண்ணனென்னும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 13 – கண்ணனென்னும்

‡ கண்ணன் என்னும் கருந்தெய்வம் ⋆
காட்சிப் பழகிக் கிடப்பேனை ⋆
புண்ணில் புளிப் பெய்தாற் போலப் ⋆
புறம் நின்றழகு பேசாதே ⋆
பெண்ணின் வருத்தம் அறியாத ⋆
பெருமான் அரையில் பீதக வண்ண ஆடை கொண்டு ⋆
என்னை வாட்டம் தணிய வீசீரே || **13.1** ||

பால் ஆலிலையில் துயில் கொண்ட ⋆
பரமன் வலைப் பட்டிருந்தேனை ⋆
வேலால் துன்னம் பெய்தாற் போல் ⋆
வேண்டிற்றெல்லாம் பேசாதே ⋆
கோலால் நிரை மேய்த்தாயனாய்க் ⋆
குடந்தைக் கிடந்த குடம் ஆடி ⋆
நீலார் தண்ணந் துழாய் கொண்டு ⋆
என் நெறி மென் குழல் மேல் சூட்டீரே || **13.2** ||

கஞ்சைக் காய்ந்த கரு வில்லி ⋆
கடைக் கண் என்னும் சிறைக் கோலால் ⋆
நெஞ்சூடுருவ வேவுண்டு ⋆
நிலையும் தளர்ந்து நைவேனை ⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் ⋆
அவன் மார்பணிந்த வனமாலை ⋆

வஞ்சியாதே தருமாகில் ⋆
மார்பில் கொணர்ந்து புரட்டீரே ॥ **13.3** ॥

ஆரே உலகத்தாற்றுவார் ⋆
ஆயர் பாடி கவர்ந்துண்ணும் ⋆
காரேறுழக்க உழக்குண்டு ⋆
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை ⋆
ஆராவமுதம் அனையான் தன் ⋆
அமுத வாயில் ஊறிய ⋆
நீர் தான் கொணர்ந்து புலராமே ⋆
பருக்கி இளைப்பை நீக்கீரே ॥ **13.4** ॥

அழிலும் தொழிலும் உருக் காட்டான் ⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் ⋆
தழுவி முழுகிப் புகுந்தென்னைச் ⋆
சுற்றிச் சுழன்று போகானால் ⋆
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே ⋆
நெடுமால் ஊதி வருகின்ற ⋆
குழலின் தொளைவாய் நீர் கொன்டு ⋆
குளிர முகத்துத் தடவீரே ॥ **13.5** ॥

நடை ஒன்றில்லா உலகத்து ⋆
நந்தகோபன் மகன் என்னும் ⋆
கொடிய கடிய திருமாலால் ⋆
குளப்புக் கூறு கொளப்பட்டு ⋆
புடையும் பெயரகில்லேன் நான் ⋆
போட்கன் மிதித்த அடிப்பாட்டில் ⋆

பொடித் தான் கொணர்ந்து பூசீர்கள் ⋆
போகா உயிர் என் உடம்பையே ॥ **13.6** ॥

வெற்றிக் கருளக் கொடியான் தன் ⋆
மீ மீதாடா உலகத்து ⋆
வெற்ற வெறிதே பெற்ற தாய் ⋆
வேம்பே ஆக வளர்த்தாளே ⋆
குற்றம் அற்ற முலை தன்னைக் ⋆
குமரன் கோலப் பணைத் தோளோடு ⋆
அற்ற குற்றம் அவை தீர ⋆
அணைய அமுக்கிக் கட்டீரே ॥ **13.7** ॥

உள்ளே உருகி நைவேனை ⋆
உளளோ இலளோ என்னாத ⋆
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் ⋆
கோவர்த்தனனைக் கண்டக்கால் ⋆
கொள்ளும் பயன் ஒன்றில்லாத ⋆
கொங்கை தன்னைக் கிழங்கோடும் ⋆
அள்ளிப் பறித்திட்டவன் மார்பில் எறிந்து ⋆
என் அழலை தீர்வேனே ॥ **13.8** ॥

கொம்மை முலைகள் இடர் தீரக் ⋆
கோவிந்தற்கோர் குற்றேவல் ⋆
இம்மைப் பிறவி செய்யாதே ⋆
இனிப் போய்ச் செய்யும் தவந்தான் என் ⋆
செம்மை உடைய திருமார்பில் ⋆
சேர்த்தானேலும் ஒரு ஞான்று ⋆

மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி ⋆
விடை தான் தருமேல் மிக நன்றே ‖ **13.9** ‖

‡ அல்லல் விளைத்த பெருமானை ⋆
ஆயர் பாடிக்கணி விளக்கை ⋆
வில்லி புதுவை நகர் நம்பி ⋆
விட்டுசித்தன் வியன் கோதை ⋆
வில்லைத் தொலைத்த புருவத்தாள் ⋆
வேட்கை உற்று மிக விரும்பும் ⋆
சொல்லைத் துதிக்க வல்லார்கள் ⋆
துன்பக் கடலுள் துவளாரே ‖ **13.10** ‖

அடிவரவு — கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே கொம்மை அல்லல் பட்டி

கண்ணனென்னும் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்